සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
ප්‍රාථමික කර්මාන්ත සහ සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
MINISTRY OF PRIMARY INDUSTRIES AND SOCIAL EMPOWERMENT

| මගේ අංකය<br>எனது இல<br>My No | DSD/HO/MF///SCBBU/5-1 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | ............................ | දිනය<br>திகதி<br>Date | 2019.03.13 |
|---|---|---|---|---|---|

சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும்,

**<u>சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கித் தொழில் சமாசத்தின் பொதுச் சபையினை கூட்டுதலும் மற்றும் பணிப்பாளர் குழுவினை நியமித்தலும்</u>**

2013 ஆம் ஆண்டு 1ஆம் இலக்க சமுர்த்தி சட்டமூலத்தின் 34வது சரத்தின் பிரகாரம் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கித்தொழில் சமாசம் தற்போது தாபிக்கப்பட்டுள்ளது.

02. அதற்கமைய முதலாவது பணிப்பாளர் சபை 2017ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தெரிவு செய்யப்பட்டதுடன் அப்பணிப்பாளர் சபையின் பதவிக்காலம் 2019.03.31ஆம் திகதியுடன் நிறைவுபெறுகின்றது. 2017.03.07ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய 2019ஆம் ஆண்டுக்கான புதிய பணிப்பாளர் சபை 09மாகாணங்களினதும் பிரதிகளை உள்ளடக்கி சமுர்த்தி வங்கிச்சங்க தலைவர்களில் இருந்து தெரிவு செய்யப்படல் வேண்டும்.

03. எனவே இப்பணிப்பாளர் சபைக்கு இணைப்புச் செய்யும் பொருட்டு தங்களது மாவட்டத்தில் ஒரு பிரதிநிதியினை தெரிவு செய்துகொள்ளல் வேண்டும். தாங்கள் தங்களது மாவட்டத்திற்குரிய சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களினதும் நிறைவேற்றுச்சபை தலைவர்களை (நிறைவேற்று சபை தலைவர்களை மாத்திரம்) ஒன்று கூட்டி அத்தலைவர்களில் இருந்து ஒருவரை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கித்தொழில் சமாசத்தின் பணிப்பாளர் சபையினை பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு தெரிவு செய்தல் வேண்டும். இத்தெரிவு சுயாதீனமான விதத்தில் அல்லது வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவதுடன் இத்தெரிவு நடவடிக்கை தங்களது தனிப்பட்ட கண்காணிப்புடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

04. மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவுசெய்யப்பட்ட நிறைவேற்றுசபை தலைவர் தொடர்பான கீழ்வரும் தகவல்களை 2019.04.10 ஆம் திகதிக்கு முன்னர் dibanksocityho@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

1?? ?????,4 ?? ??? , ???????????, ?????????? . /1?? ?????? , 4 ??? ???? ,?????????? ????????? /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන)<br>பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය )<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

| மாவட்டம் | பிரதிநிதித்துவப்படுத்தும் சமுர்த்தி வங்கிச்சங்கம் | தெரிவுசெய்யப்பட்ட நிறைவேற்று சபை உறுப்பினரின் பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|
| | | | | |

05. இத்தெரிவுக் கூட்டத்திற்கான உபசாரச் செலவின் பொருட்டு ஒருவருக்கு ரூபா 150/= வுக்கு மேற்படாத தொகையினை செலவு செய்யமுடியும். அதற்கான செலவு மதிப்பீட்டு அறிக்கையினை தயாரித்து குறுநிதிப் பிரிவுக்கு அனுப்பி அதற்கான நிதி ஒதுக்கீட்டை பெற்றுக்கொள்ளவும்.

06. மேலும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் சமுர்த்தி வங்கிச்சங்க நிறைவேற்றுக்குழு தலைவர்களுக்கு பிரயாணக் கொடுப்பனவாக உயர்ந்தபட்சம் ரூபா 500/= வுக்கு உட்பட்ட தொகையினை வங்கிச் சங்கத்தினால் வழங்க முடியும். இது தொடர்பான மேலதிக தகவல்களை 011-3054528 / 011-2887469 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் தங்களை வினயமுடன் வேண்டுகின்றேன்.

**B.K.நிஷாந்த**
பணிப்பாளர்(குறுநிதி)
பணிப்பாளர் நாயகத்திற்காக

TRANSLATED BY – I. ALIYAR